சார்பு நீதிமன்றம், சங்ககிரி

அ.வ.எண்.48/2020

வா.சா.2

நாள். 06.02.2024.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஜெகதீஸ்வரன் | மதம்: | இந்து |
| தகப்பனார் /கணவர் பெயர்: | ராஜகோபால் | ஜாதி: | -- |
| கிராமம்: | -- | வேலை: | -- |
| வட்டம்: | -- | வயது: | -- |

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய வா.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

எனக்கு சாட்சி சம்மன் வந்தது. வாதி தங்கவேலை எனக்கு தெரியும். இறந்து போன 1 ம் பிரதிவாதியை எனக்கு தெரியும். மற்ற பிரதிவாதிகளை எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்ட நிலம் மலங்காடு கிராமத்தில் உள்ளது. அந்த நிலத்தின் விஸ்தீரணம் 1.66 ஏக்கர். அந்த நிலத்தை வாதியும் 1 ம் பிரதிவாதியும் சேர்ந்து கிரையம் பேசி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டார்கள். கிரைய ஒப்பந்த தேதி தெரியாது. 2018 ஜுலை மாதம் ஒப்பந்தம் போடப்பட்டது. கிரைய தொகை ரூ.6,50,000/- என பேசி முடிக்கப்பட்டு முன்பணமாக ரூ.5,90,000/- வாதி 1 ம் பிரதிவாதிக்கு கொடுத்தார். மீதி கிரைய தொகையை 20 மாதத்தில் கொடுத்து கிரையம் செய்து கொள்ள வேண்டும் என்று பேசி முடிக்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் நானும் என் தம்பி ராஜேந்திரனும் சாட்சி கையொப்பம் செய்தோம். கிரைய ஒப்பந்தத்தை செந்தில்குமார் என்பவர் தயார் செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ல் தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். ஒப்பந்தப்படி 1 ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-ஜெகதீஸ்வரன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.